பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

ZOOLOGY-89
By
Thangarajah- B.Sc.(Cey)
REVISION
CLASSIFICATION
Sat. & Sun 7-30-8-30
THEORY
GENETICS
Sat. & Sun. 10-30 - 11-30
YALL HALL
JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ 2/-

ZOOLOGY - 90
Thangarajah-B Sc. (Cey
ORIGIN OF LIFE
& CYTOLOGY
Sat & Sun 8 30 - 9-30
HISTOLOGY
Sat. & Sun. 9-30 - 10 30
YALL HALL
JAFFNA.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு ஐப்பசி மீ 04 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. அவ்வல் பிறை 08 ( 20 - 10 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 214

# இந்தியாவில் இரு பெரும் விமான விபத்துகள்!
# ஒரே நாளில் 165 பயணிகள் உயிரிழந்தனர்!!

புதுடில்லி, அக்டோபர் 20

இந்தியாவில் இடம்பெற்ற இரண்டு விமான விபத்துக்களில் 165 பேர் உயிரிழந்தனர். நேற்று இந்த விபத்துக்கள் இடம்பெற்றன.

குஜராத் மாநிலத்தில் அகமதபாத்தில் இந்திய எயர்லைன்ஸின் போயிங் விமானம் நொருங்கி விழுந்தது இதில் 130 பேர் கொல்லப்பட்டனர். அஸாம் மாநிலத்தில் கௌஹாத்தியில் வாயுதூத் விமானம் ஒன்று நொருங்கி விழுந்ததில் 35பேர் கொல்லப்பட்டனர்.

பம்பாயில் இருந்து புதுடில்லி சென்றுகொண்டிருந்த போயிங் விமானம் அஹமதபாத்தில் தரை இறங்கிய போது, தரையில் மோதி வெடித்துச் சிதறியது. இவ்விபத்தில் 13 வயதுச் சிறுவன் உட்பட 5 பேர் உயிர் தப்பினர்

கௌஹாத்தியில் விபத்துக்குள்ளான விமானத்தில் இருந்த அனைவரும் உயிரிழந்தனர். இவ்விமானம் குன்று ஒன்றில் மோதியதால் வெடித்துச் சிதறியது. [உ—எ]

## ராஜீவ் - டிக்ஸிற் புதுடில்லியில் பேச்சு

புதுடில்லி, அக் 20

கொழும்பிற்கான இந்தியத் தூதர் ஜே என். டிச்ஸிற் நேற்று மாலை பிரதமர் ராஜீவ் காந்தியை டெல்லியில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

வடக்கு- கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றி திரு டிச்ஸிற் பிரதமருக்கு எடுத்துச் சொன்னர்.

ஜனதிபதி தேர்தல் சம்பந்தமான நிலவரம் குறித்தும் பிரதமருக்கு திரு. டிச்ஸிற் விவரித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

★ ஜீப்கள், பஸ்கள் சேதம் ★ படையினர்மீது கல்வீச்சு
★ வீதிகளில் ஆர்ப்பாட்டம் ★ அநுராதபுரத்தில் ஊரடங்கு

# தென் இலங்கையில்
# கலவரம்! பதற்றம்!!

## நிலைமை கட்டுமீறும் அளவுக்கு அரசு எதிர்ப்பு நடவடிக்கைகள்

கொழும்பு, அக்டோபர் 20

அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், வன்செயல் நடவடிக்கைகள் என்பன கட்டுமீறும் அளவுக்கு தென்னிலங்கையில் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

மீண்டும் நேற்று வெடித்த வன்செயல் சம்பவங்களினல் தென்னிலங்கையில் பெரும் பதற்றம் ஏற்பட்டிருக்கிறது. சாதாரண நடவடிக்கைகள் மூலம் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன,

அரசுக்கு எதிரான போராட்டத்துக்குத் தினமும் ஆதரவு அதிகரித்து வருவதாகவும், அரச ஆதரவு சக்திகள் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு, இரத்மலானை, களுத்துறை, அனுராதபுரம் பலாங்கொடை, காலி, மாத்தறை, பெந்தோட்டை ஆகிய இடங்களில் தென்பகுதி தீவிரவாத கோஷ்டியினர் நேற்று ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

இதனுல் கொழும்பு உட்பட தென்பகுதியின் பல இடங்களில் நேற்றுப் பெரும் பதற்றம் நிலவியது.

இரத்மலானை, அனுராதபுரம் ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காகப் பொலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்.

அனுராதபுரத்தில் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நேற்று நண்பகல் 12 மணி முதல் 24மணி நேர ஊரடங்கு உத்தரவு பிரகடனப்படுத்தப்பட்டது.

கொழும்பு உட்பட நாட்டின் தென்பகுதியில் பலஇடங்களிலும் பொலீஸாரும் பாதுகாப்புப் படையினரும் பெருமளவில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஜனதிபதித் தேர்தலையும், பொதுத் தேர்தலையும் ஒரே சமயத்தில் நடத்தக் கோரிக்கை விடுத்தே நேற்றைய ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கொழும்பு நகர மண்

[6-ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

20 - 10 - 1988
ஐப்பசி - 04
வியாழக்கிழமை
சுபநேரம்:-
07-32முதல் 09-02வரை
ராகுகாலம்;-
01-32முதல் 03-02வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
விஜயதசமி

## 'கிரகம்' அகன்றுவிட்டது என்கிறர் பிரதமர் பிரேமா

கொழும்பு, அக். 20

நிதி அமைச்சில் இருந்து ஆட்சி நடத்தி வந்த 'கிரகம்' அகன்று விட்டது. இனி நாம் நாட்டை அபிவிருத்தி செய்யலாம் பிரதமர் பிரேமதாச இப்படி கண்டியில் சொன்னர்.

அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பணம் கேட்டால் பணம் இல்லை என்றுதான் அந்த 'கிரகம்' சொல்லி வந்தது.

செலவீனத்தில் வெட்டு வேண்டும் என்று கூறி வந்த அக் கிரகம்' இன்று இடம் மாறிவிட்டது என்முர் பிரதமர். (ஒ-எ)

### முச்சந்தி மாரி



உவர் கொந்துருத்துக்காறர் சாத்திரியார் மாதிரியெல்லோ பேசிருர்.....!

### ஸ்ரீலங்கா ராணுவம் தாக்குதல்!

கொழும்பு. அக் 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடாப் பகுதியில் ஸ்ரீ லங்கா பாரா இராணுவத்தினர் பொதுமக்களைத் தாக்கியதாக அறிவிக்கப்படுகிறது

முன்னர் நடந்ததாகக் கூறப்படும் சில சம்பவங்களுக்குப் பதில் நடவடிக்கையாக இத்தாக்குதல்கள் அமைந்தன என்று ஏஜன்சிச் செய்தி ஒன்று தெரிவித்தது

### பஸ்சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம் அக். 20

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினுல் நடத்தப்படும் யாழ — திருமலை பஸ்சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. (உ-10)

## பொலீஸ் கராஜ் மீது கண்டியில் தாக்குதல்
### ஆயுதங்கள் அபகரிப்பு

கொழும்பு அக் 20

கண்டியில் பல்லேகல என்ற இடத்திலுள்ள பொலீஸ் கராஜ் ஒன்றை தென்பகுதி தீவிரவாதிகள் நேற்று முன்தினமிரவு தாக்கினர்கள்

துப்பாக்கிகள். வெடிமருந்துகள் தோட்டாக்கள், பெருமளவு பொலீஸ் சீருடைகள் போன்றவை தீவிரவாதிகளால் அங்கிருந்து அபகரித்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது எவருக்கும் உயிராபத்தோ, காயங்களோ ஏற்படவில்லையென்று தெரிவிக்கப்பட்டது. (உ-ஐ)

## பிரசாவுரிமை சட்டமூலம் நவம்பரில்!

கொழும்பு, அக் 20

இந்திய வம்சாவழியினரான நாடற்றவர்களுக்கு இலங்கைப் பிரசா உரிமை வழங்கும் சட்டமூலம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இத்தகவலை அமைச்சரும் இ தொ. கா. தலைவருமான திரு. எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

இந்தச் சட்டத்தின் கீழ் 2 லட்சத்து 33 ஆயிரம் நாடற்றவர்கள் இலங்கைப் பிரசா உரிமை பெறுவர். (ஒ எ)

## யாழ். பாடசாலைகள் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம். அக், 20

யாழ். மாவட்டப் பாடசாலைகள் அனைத்தும் நேற்று இயங்கத் தொடங்கின.

எனினும் மாணவர்களின் வரவு எதிர்பார்த்த அளவு இருக்கவில்லை

பாடசாலைகள் ஆரம்பமானதையடுத்து இன்று விஜயதசமி நிகழ்ச்சிகள் பாடசாலைகளில் வழமை போல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதே சமயம் பாடசாலை மாணவர்களுக்கான யாழ்- கொடிகாமம், யாழ் காங்கேசன்துறை பாதையில்விசேட பஸ்சேவைகளை நடத்துவதற்கான ஒழுங்குகளை வடபிராந்திய போக்குவரத்துச்சபை மேற்கொண்டுள்ளது. (உ-10)

## பரீட்சைகள் தடையின்றி நடைபெற ஒத்துழைக்குக!
### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம் அக் 20

அடுத்த மாத இறுதியில் நடைபெறவிருக்கும் ஆண்டு இறுதிப் பரீட்சைகள் தடையின்றி நடைபெறுவதற்கு அனைவரும் ஒத்துழைப்புத்தரவேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் நேற்று யாழ் கல்வித்திணைக்களத் தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது

யாழ். மாவட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் தலைமையில் பாடசாலை அதிபர்கள் கலந்துகொண்ட கூட்டமொன்று நேற்றுக் காலை ; திணைக்களத்தில் நடைபெற்று.

இந்தக் கூட்டத்திலேயே மேற்படித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

''யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் தடை இன்றித் தொடர்ந்து இயங்கவேண்டும்'' என்ற தீர்மானமும் இந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ஒ-9-5)

## ஆண்டு 10 பாடநூல்கள் யாழ் வந்தன

யாழ்ப்பாணம், அக் 20

ஆண்டு பத்துக்கான விஞ்ஞானம் (பகுதி இரண்டு) பாடநூல்கள் யாழ் கல்வித் திணைக்களத்தை வந்தடைந்தன.

இவை தற்பொழுது யாழ் இந்து மகளிர் கல்லூரியில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன

இந்த வருட ஆரம்பத்திலேயே விநியோகிக்கப்

(6ஆம் பக்கம் பார்க்க]

## அடையாளம் காணப்பட்டது

குருநகர், அக் 20

இந்திய அமைதிப் படையினரால் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் ஒப்படைக்கப்பட்ட இளைஞரின் சடலம் பெற்றோரால் நேற்று அடையாளம் காணப்பட்டது.

குருநகரைச் சேர்ந்த எல்மோ அன்ரன் றெபேட் (மசலி) வயது 19, என்பவாது சடலமே அவரது பெற்றோரால் அடையாளம் காணப்பட்டது. (உ-51)

## மலேரியாவுக்கு அக்குபங்சர் வைத்தியம்

கொழும்பு, அக், 20

அக்குபங்சர் மூலம் மலேரியாவைக் குணமாக்கும் முறை ஒன்றை கொழும்பு செற்கு ஆஸ்பத்திரி வைத்திய நிபுணர்கள் கண்டு பிடித்து உள்ளனர்.

மருந்துகளை உபயோகிக்காமல மலேரியாவை இதன்மூலம் குணப்படுத்தலாம் என்று கூறப்படுகிறது. (ஒ-எ)

## ஐ. தே. க. தலைவரின் கார்ச் சாரதி கொலை

கொழும்புஅக்டோபர் 20

ஐக்கிய தேசியக்கட்சி தலைவர் திரு ரஞ்சன் விஜேரட்ணவின் கார்ச்சாரதி திரு. கே சோமதாச தென்பகுதி தீவிரவாதிகளால் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்

ஹோமாகமவிலுள்ள அவரது வீட்டில்வைத்து அவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. (ஐ)

## காரைநகரில் நாளை ஹர்த்தாலுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், அக் 20

காரைநகரைச் சேர்ந்த தியாகிகள் இளங்கோ, மயூரன் ஆகியோரின் ஓராண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தை ஒட்டி நாளை காரைநகரில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு காரைநகரில் பிரசைகள்குழுகோரிக்கை விடுத்திருக்கிறது.

நினைவஞ்சலிக் கூட்டம் தொடர்பான நிகழ்ச்சிகள் நாளை காலை 8-30 மணிக்கு வாரிவளவு ஆலய முன்றலில் ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

# பூஸாகைதிகளுக்கு ஆதரவாக
# சுழற்சிமுறை உண்ணாவிரதம்
## நாளை நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம் அக் 20

தம்மை விடுதலை செய்யக்கோரி பூஸாக் கைதிகள் நடாத்திவரும் சாகும்வரை உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்து பூஸாவிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களால் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று யாழ். நகரில் மேற்கொள்ளப்பட உள்ளது

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் இந்தப் போராட்டம் ஆரம்பமாகும். இதனை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில்-

இந்தப் போராட்டத்

(6ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த தளபாடங்கள் கட்டில், மேசை, தையல்மெஷின் Guitar Book rack. Showcase கண்ணாடிமேசை. பழைய ஹோல்செற் மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. M தியாகராஜன், 326, பிரதான வீதி யாழ்ப்பாணம் (சென்பற்றிக்ஸ் சந்திக்கருகில்) (7332)

நல்ல நிலையிலுள்ள "Usha" Panelectric D/D குளிர்சாதனப் பெட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு Uni Services Engineers. Hospital Lane Manipay. (7356)

Honda Reconditioned C- 90, C- 70, C- 50, Lancer - 90, Mb- 5 Chaly மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. No- 16, கண்டி ரோட், சுண்டுக்குளி. யாழ்ப்பாணம். (A G.A அலுவலகம் முன்பாக) (7331)

### வீடியோ கமெராக்களும், டெக்குகளும் விற்பனைக்கு

J. V. C, [Title]. Sony National G' 100, கமெராக்களும், National 180 100, Orion டெக்குகளும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- தி. சிவநாதன் சேகர் றெக்கோடிங் பார், நெல்லியடி. (7228)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். (C 357)

### வலம்புரிச்சங்கு

இலங்கையில் இலட்சுமிகரம் நிலவுவதற்கும் ஆலயங்களில் பூஜை ஆராதனைகளுக்கும் உகந்த சிறந்த வலம்புரிச் சங்குகள் விற்பனைக்கு உண்டு. ஆரம்ப விலை ரூ. 100/- தொடர்பு: தாஸ், 188 புதுச் செட்டித்தெரு, கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13. (7360)

## தேவை

பிளேட்டின் மெசின் மைண்டர்கள் தேவை. திறமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப வேதனம் வழங்கப்படும். நேரில் வரவும். செட்டியார் அச்சகம், இல 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/ 617

### திருமண சேவை

வெளிநாட்டில், உள்நாட்டில் உள்ள மணமக்கள் உள்ளனர் போதிய சாதகக் குறிப்பு உள்ளன. தொடர்பு: Nico திருமண சேவை, 648 1/3, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் (காப்புறுதி கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக), 7229)

### கண்டெடுக்கப்பட்டது

யாழ் பிறவுண் வீதி- நாவலர் வீதி சந்தியில் பணம் திங்கட்கிழமை (17 10.88) கண்டெடுக்கப்பட்ட துஉரியவர் தொகை முதலிய விபரங்களை எழுத்து மூலம் அறிவிக்கவும் விளம்பர இல—01 உதயன், யாழ்ப்பாணம். (7357)

## கல்வி

### G. C. E. (O/L) NEW SYLLABUS

பரீட்சையில் திறமைச் சித்தி பெற உதவும் 5 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும் தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம் வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் ரூபா 30/- புத்தகசாலைகளில் கிடைக்கும் உயர் கல்விப்பதிப்பக வெளியீடுகள். (7001)

### வினா விடை வகுப்பு

A/L 89 கலை, வர்த்தக மாணவர்களுக்கான வினா விடை வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. மொடேண் எடியுகேசன் சென்ரர், சரவெட்டி. கிளைகள்:- பருத்தித்துறை. வவுனியா. (7220)

### A/L இரசாயனம்

108, Brown Road, A/L 89, இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம்: 23- 10- 88 ஞாயிறு 3. 15 p.m சனி, ஞாயிறு 3 . 15 to 5. 45 p . m, 3 . 15 to 4. 15 p. m பௌதிக இரசாயனம் 4 . 15 to 5. 45 p. m பொது இரசாயனம், சேதன இரசாயனம். (7230)

### வீடியோ படப்பிடிப்பு

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள, அமங்கல நிகழ்ச்சிகளை 3 கமெராக்கள் பொருத்தி புதுமையான முறையில் வீடியோ படப்பிடிப்புச் செய்திட "பிரதீப் மூவிஸ்", புதுவீதி, கொய்யாத்தோட்டம், (கிளைகள் இல்லை) தொடர்புகட்கு:- 'துஸ்' (சுணில்). (6980)

### ஆய்வுகூட அடிக்கல்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் உருவாக இருக்கும் இரண்டு மாடிகளைக்கொண்ட ஆய்வு கூடத்திற்கான அடிக்கல்லை கல்லூரி அதிபர் திரு. க. பாலச்சந்திரன் நட்டார். (ச-இ-31)

முதலாவது

# ★ பிறந்த நாள் வாழ்த்து ★



## முத்துலிங்கம் பாபுஜி

பண்ணுகம் முத்துலிங்கம் - நிர்மலாதேவி தம்பதிகளின் செல்வ மகன் பாபுஜி தனது முதலாவது பிறந்தநாளை 20- 10- 88 இன்று கொண்டாடுகின்றார் பாபுக் குட்டியை அம்மா, அப்பா, ஐயா, அம்மம்மா, ஆசையம்மா, ஜெயாச்சித்தி, அத்தை, அம்மம்மா, அப்பப்பா ஆசையப்பா. சித்தப்பாவும் கொக்குவில் சிவமாமா, வசந்தி அன்ரி, சரண்யாஅக்காவும் உறவினர்களும் விசவத்தனை முருகன் அருளால் பல்கலையும் பெற்று நலமாக வாழ வாழ்த்துகின்றார்கள்.

பண்ணாகம்,
சுழிபுரம் (7352)

உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான

# கம்பியூட்டர் கல்வி

● COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE

பயிற்சிக் காலம்: 40 நாட்கள் கட்டணம்: 950/-
(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)

ஆரம்பம்: 28-10-88

[திங்கள், புதன், வெள்ளி] வகுப்புகள்

BASIC LANGUAGE கற்றவர்களுக்கான

● COMPUTER PROGRAMMING IN COBOL LANGUAGE

பயிற்சிக் காலம்: 3 மாதம் கட்டணம்: 1, 500/-
(பகுதி பகுதியாகச் செலுத்தலாம்)

ஆரம்பம்: 29-10-88

(சனி, ஞாயிறு, வகுப்புக்கள்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி IBM [Compatible] கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

● குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்களாகையால், விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்து கொள்ளவும்.

## UNIKCO COMPUTER CENTRE

No 5, மின்சார நிலைய வீதி,
2ஆம், ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உப தபாற் கந்தோர் அருகாமை)
(C-633)

அனேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு அமைய எமது நிறுவனத்தின் கிளை 20 - 10 - 88 முதல் ஆஸ்பத்திரி ஒழுங்கை, மானிப்பாயில் இயங்கத் தொடங்குகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சகலவிதமான குளிர்சாதனப்பெட்டிகள் குளிரூட்டிகள், ரீ. வி. டெக், குக்கர்கள், மின் மோட்டர், மின் விசிறிகள் மற்றும் வீட்டு மின்சார உபகரணங்களின் திருத்த வேலைகளும் எம்மால் நியாயமான கட்டணத்தில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

## UNI SERVICES ENGINEER,

HOSPITAL LANE,
MANIPAY.

UNI SERVICES ENGINEERS
M. Aseervatham Lane,
Off Hospital Road,
JAFFNA.
(7355)

## ஓர் ஆண்டு நினைவு அஞ்சலி



### செல்வி அன்ரனெற் அருந்ததி அருளானந்தம்

மண்ணுலகில். விண்ணுலகில்:
1961. 09. 07 1987. 10. 15

15-10-1987 இல் கர்த்தருக்குள் நித்திரை அடைந்த செல்வி அருந்ததி அருளானந்தத்தின் ஞாபகார்த்த ஆராதனை எதிர்வரும் சனிக்கிழமை 22-10-1988 ஆம் திகதி பி. ப 3.00 மணிக்கு அளவெட்டி கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெறும்

உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கும்.

பெற்றோர், சகோதரிகள்.
அளவெட்டி தெற்கு. ம்ச. அருளானந்தம்
அளவெட்டி. (தந்தை)
(7301)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### B. ஜெகானந்தராஜா
(ஜெகன்)

ஆண்டவன் படைப்பு: அநியாய அழிப்பு:
13 - 06 - 1957 20 - 10 - 1987

நேற்று வரை இவன் எம் கூட்டாளி; ஆனால் இன்றோ! இவன் எம் மத்தியில் இல்லை. இவன் நினைவுகள் என்றும் நிதர்சனங்களாகவே உள்ளன. அந்தப் பசுமையான நாட்கள் அவை வாழ்க்கையின் பொன்னான வார்ப்புக்கள்.

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனை வழிபடும்.

நண்பன் ராதா,
மனைவி, மக்கள்,
பஸ்தியாம்பிள்ளை.
(C/637)

லொறி எஞ்சின் திருத்த வேலைக்கும்
உடற்கோப்பு (பொடி)
மறுசீரமைத்தல் (மரவேலை) வேலைக்கும்

## கேள்வி விண்ணப்பம்

மேற்படி கேள்விகளுக்கான எமது 06-10-88 திகதிய உதயன் பத்திரிகை விளம்பரத்தின்படி விண்ணப்ப முடிவு திகதி 31-10-88 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பது அறியத்தரப்படுகிறது.

—பொது முகாமையாளர்

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.
1988-10-18 (C/639)

## கண்ணீர் அஞ்சலி



### திரு. ஆறுமுகம் சிவசிதம்பரம்
உப அதிபர்
யா/ இணுவில் அமெரிக்க மிஷன் த.க. பாடசாலை

தோற்றம்:- மறைவு:-
11- 10- 1929 17 - 10- 1988

இப்பாடசாலையில் நீண்டகாலமாக ஆசிரியராகவும் உப அதிபராகவும் சிறந்த சேவையாற்றி ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளங்களில் அழியாத இடம் பெற்ற திரு. ஆறுமுகம் சிவசிதம்பரம் அவர்களின் திடீர் மறைவு எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்துகின்றது.

அன்னாரின் குடும்பத்தவர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள்
இணுவில் அ. மி த. க. பாடசாலை.
(7291)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி - சபிண்டீகரண அழைப்பும்



அமரரான எங்கள் அன்புத் தெய்வம்

### உயர்திரு. தம்பிமுத்து இரகுப்பிள்ளை

தோற்றம்: மறைவு:
17 - 12 - 1935 21 - 09 - 1988

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 20-10-1988 வியாழக்கிழமை காலை கீரிமலையிலும் வீட்டுக் கிரியைகள்; சபிண்டீகரணம் 21-10-1988 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்தித்து சபிண்டீகரணத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
தங்கை, சகோதரர்கள், மைத்துனர்மார்.

22, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(7358)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதித் தேர்தல்:

# நவ சமசமாஜக் கட்சி தனித்துப் போட்டியிடும்

ஜனாதிபதித் தேர்தலில் நவ சமசமாஜக் கட்சி வேட்பாளரை நிறுத்தும் என்று கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ஐக்கிய சோஷலிச முன்னணிக்குள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மக்கள் கட்சி, ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிடலாம் என்றும் சொல்லப்படுகிறது.

ஐக்கிய சோஷலிச முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய சோஷலிச முன்னணி போட்டியிடக் கூடாது என்ற அபிப்பிராயத்தைக்கொண்டுள்ளன.

இதனால் ஐக்கிய சோஷலிச முன்னணியில் பிளவு ஏற்படக் கூடிய நிலை இருப்பதாகத் தெரியவருகின்றது.

### ஏழரைலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு

கடந்த கால அசம்பாவிதங்களின் போது சேதமடைந்திருந்த கோப்பாய் கமநல சேவை நிலையம் சுமார் 7½ லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

## ஸ்ரீலங்கா கடற்படையினரால்

# இன்பருட்டிக் கடலில் மீனவர் மீது தாக்குதல்

வடமராட்சி, அக் 20

இன்பருட்டிக் கடலில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் மீனவர்கள் தாக்கப்பட்டார்கள்.

அவர்களது மீன்பிடி உபகரணங்களான மோட்டார் எஞ்ஜின் வழிகாட்டிக் கருவி (கொம்பாஸ்) வலைகள் சேதப்படுத்தப்பட்டு கடலினுள் வீசப்பட்டனவென்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி அளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

கடலில் வழமையாக நிற்கும் ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பலில் இருந்து சிறிய படகு ஒன்றின் மூலம் இறங்கிய ஸ்ரீலங்காக் கடற்படையினர் மீன் பிடி வளத்தை அடைந்ததாகவும் பின் மீனவர்களைப் பார்த்து சிங்களம் தெரியுமாவென்று கேட்டனர் என்றும் கூறப்படுகிறது.

அதற்கு மீனவர்களான தவராசா (வயது 27) இரத்தினசிங்கம் (வயது 34) அம்மான் (வயது 55) ஆகிய மூவரும் ஒரே குரலில் "தெரியாது" என்று தமிழில் கூறினராம். இதனை அடுத்தே தாக்குதல் இடம் பெற்றது.

வடமராட்சியில் கடற்தொழிலாளர் தலைமைச் சங்கத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-160)

## சத்தியசாயி சேவா சமித்தி

மானிப்பாய், அக் 20

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தியின் மானிப்பாய் கிளை செப்டம்பர் மாதத்திலிருந்து மானிப்பாய் ஹொஸ்பிட்டல் வீதியிலுள்ள இல்லத்தில் செயல்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு வியாழக் கிழமைகளிலும் மாலை 4.00 மணிமுதல் 5.00 மணிவரை பஜனைகள் மற்றும் சமித்தி நடவடிக்கைகள் இங்கு நடைபெற்று வருகின்றன. (இ-90)

## யாழ். மாவட்டப் பாடசாலை

# ஆசிரியருக்கு சம்பளம் 25 ஆம் திகதிக்குப் பின்

யாழ்ப்பாணம், அக் 20

யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கு இம்மாதச் சம்பளம் 25 ஆம் திகதியின் பின்பே வழங்கக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு யாழ். கல்வித் திணைக்கள பிரதம கணக்காளர் ஆர். சுகுணதிரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்தசிலநாட்களாக கல்வித் திணைக்களம் மூடப்பட்டிருந்ததால்சம்பள வேலைகள் பூரணப் படுத்தப்படவில்லை.

இந்நிலையில் அடுத்த வாரம் முதலே சம்பள விநியோகத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். (உ-9)

## கோரிக்கைகளை அடுத்து

# மீண்டும் ஒஸ்மானியா உப அதிபராக நியமனம்

யாழ்ப்பாணம், அக் 20

யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியின் உப அதிபராக மீண்டும் ஜனாப் கே. எம். எஸ். ஹமீட் நியமிக்கப் பட்டுள்ளார்.

யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியில் ஆறு வருடங்களாக உப அதிபராகக் கடமையாற்றிய ஜனாப் கே. எம். எஸ். ஹமீட் கடந்த வருடம் ஊர்காவற்றுறைக்கு இடமாற்றப்பட்டிருந்தார்.

இவரது இடமாற்றத்தை இரத்துச் செய்யும்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர் சங்கமும் முஸ்லிம் பொது ஸ்தாபனங்களும் யாழ் கல்விப் பணிப்பாளர் ஊடாக கல்வி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன.

அவர்களது வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து கே எம். எஸ் ஹமீட் மீண்டும் ஒஸ்மானியாக் கல்லூரியின் உப அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (இ-10)

## யாழ். ஆஸ்பத்திரி ஆலயத்தில் திருபபலி

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த வருடம் அக்டோபர் மாதம் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் அகால மரணமடைந்த 22 ஊழியர்களினதும், பொது மக்களினதும் ஆன்ம இளைப்பாற்றிற்காக யாழ். வைத்தியசாலை அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயத்தில் திருப்பலிப் பூசை நடைபெற உள்ளது.

இன்று 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை ஐந்து மணிக்கு நடைபெறும். இரங்கற் திருப்பலியில் பங்குபற்றி அவர்களின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு வைத்தியசாலை கிறிஸ்தவ ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-10)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## முதுகலைமாணித் தகுதிகாண் தேர்வு - 1987/88

முதுகலைமாணித் தகுதிகாண் தேர்வுக்காகப் பின்வரும் பாடங்களில் பட்டப்படிப்பில் சாதாரண சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொருளியல், புவியியல், இந்துநாகரிகம், வரலாறு சமஸ்கிருதம், தமிழ், மெய்யியல, மொழியியல்.**

அறிவுறுத்தல்களுடன் கூடியவிண்ணப்பப்படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால்மூலமாகவோ கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் 20 - 10 - 1988 இலிருந்து 11 - 11 - 1988 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் பல்கலைக் கழக நிதியாளரிடமிருந்து 15 ரூபா செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவம் பெற வரும் போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 15 ரூபாவிற்கான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 5 ரூபா 75 சதம் பெறுமதியான முத்திரை ஒட்டிய 38 X 25 ச.மீ அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 15 - 11 - 1988 ஆம் திகதிக்கு முன்பாக கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்,

**15.11.88 இற்குப் பின்வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

பதிவாளர்,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம் 18 - 10 - 88

(C-630)



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### MASTER OF ARTS QUALIFYING EXAMINATION - 1987\88

Applications are invited from Pass Degree candidates for the above examination in the following subjects :

**Economics, Geography, Hindu Civilization, History Sanskrit, Tamil, Philosophy and Lingustics.**

Application forms with relevant particulars could be obtained from the Office of the Dean, Faculty of Arts in person or by post from 20-10-1988. Forms will be issued by the Dean's Office upto 11-11-1988.

Those who wish to obtain the forms in person are required to produce a receipt from the Shroff, Finance Branch of the University of Jaffna for payment of Rs. 15/- Those who wish to obtain the forms by post are required to send a Money Order / Postal Order drawn in favour of Bursar University of Jaffna together with a self addressed envelope of 38 x 25 c m. in size affixing stamp to the value of Rs 5/- and cents -/75

Completed application forms should be submitted to the office of the Dean, Faculty of Arts on or before 15-11-1988,

**Applications received after this date will not be accepted.**

**Registrar,**
University of Jaffna,
Jaffna.
18-10-1988.

(C-631)



## IMMEDIATE VACANCIES

### IN SAUDI ARABIA

| | | |
|---|---|---|
| (1) | Mechanical Engineer<br>இயந்திரப் பொறியியலாளர் | — Negotiable |
| (2) | Electrical Supervisor<br>மின்சார மேற்பார்வையாளர் | — Negotiable |
| (3) | Mechanical Supervisor<br>இயந்திரவியல் மேற்பார்வையாளர் | — Negotiable |
| (4) | Plumber<br>குழாய் பொருத்துனர் | — Negotiable |
| (5) | Boiler Technician | — Negotiable |
| (6) | Maintenance Cleaners<br>பராமரிப்பு சுத்திகரிப்பாளர் | — 450 S. R. |
| (7) | University Cleaners<br>கலாசாலை சுத்திகரிப்பாளர் | — 456 S. R. |
| (8) | Hospital Cleaners<br>ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர் | — 400 S. R. |
| (9) | Hospital Lady Cleaners<br>ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர் (பெண்கள்) வயது 30 - 42 | — 456 S. R. |
| (10) | Catering Lady Waiters<br>விருந்துணவு பரிமாறும் பெண்கள் வயது 30 — 42 | — 650 S. R. |


**SAUDI OPERATION & MAINTENANCE CO. LTD.**

**T. V. TRAVELS & TOURIST**
(Railway Station front)
**Brown Road,**
**KOKUVIL.**

(C 611)



**புரோட்டீன் நிறைந்த புரோட்டீனெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!**




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது

சில்லறை விலை ரூபா 68/55 125 கிராம்

Pfizer

ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





| | |
|---|---|
| அமரர்<br>**எஸ்.என். கந்தையா**<br>(J. P. இ. அதிபர்) | அமரர்<br>**என். கே. தர்மலிங்கம்**<br>(M. A Dip ஆசிரியர், அதிபர்) |
| அன்னைமடி:<br>25. 9. 1917 | அன்னைமடி:<br>28. 3 1941 |
| அநியாய அழிப்பு:<br>20. 10. 1987 | அநியாய அழிப்பு:<br>20. 10. 1987 |

**திதி: 7- 11- 1988**

ஆண்டொன்று உருண்டோட அகால நாட்கள் நினைவுகூர, ஆதவனாய் எங்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் அள்ளி ஒளிதந்து கல்வித் துறையில தந்தையும், தனயனுமாய் அளப்பரிய சேவையாற்றி அதன் அகமாம் கல்லூரியில் கண்மூடித் திறப்பதற்குள் காலனடி சேர்ந்த கற்பூரதீபங்களே! நடந்திட்ட கோரங்களால் நாமிழந்த தியாகச் சுடரே! இந்த இழப்பை வீடாறுமோ! நாடாறுமோ! முடிந்திட்ட மரணங்களால் முடிவிலை உங்கள் நினைப்புகளை அகிம்சா வழியோடு ஆதரவு தந்து வாழ்ந்த குடும்பத் தலைவரே! தொடர்ந்து பல சேவை காத்திருக்க படர்ந்த எம் குலக் கொழுந்தையும் பறித்தனரே! கந்தனைப் புழ்பாடி வந்தீர்கள் காவலில்லை எங்களுக்கு. காலமெல்லாம் கண்ணீரைத் தந்து விட்டான் கந்தனவன்! உங்கள் சொந்தங்களாகிய எங்கள் நெஞ்சங்களைப் புண்ணாக்கி நெடுந்தூரம் பறந்தீரே! உங்களோடு வாழ்ந்த பொன்னான நாட்களை மறக்க முடியாது தவிக்குப் புலம்பும் எங்களுக்கு அன்புத் தெய்வங்களே ஆறுதல் தாருங்கள்! உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் எங்கள் பிரார்த்தனை தொடரும்.

அன்னார்களின் ஓராண்டுத் திவசம் 7- 11- 1988 இல் அன்னார்களின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தங்கள் குடும்பத்தினரும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
தாய், மனைவிமார், பிள்ளைகள், மாமன்மார்,
மருமக்கள், மச்சினிமார், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

93/2, கச்சேரி கிழக்கு ஒழுங்கை.
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(7297)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J. M. J

உங்கள் பயண அமைப்பாளர்




★ கனடா ★ ஜேர்மனி ★ பிரான்ஸ்
★ சுவிஸ் ★ இத்தாலி

மேற்படி நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது குழுக்கள் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டன என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். எமது குழுக்கள் பிரதி வாரமும்

**கனடா, ஜேர்மனி, பிரான்ஸ்**

எவ்வித இடையூறுமின்றிப் பயணம் மேற்கொண்டு வருகின்றன. மேற்படி நாடுகளுக்கு நீங்கள் பயணம் செய்ய இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

எனவே விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
அன்புடன் அழைக்கிறேன்.

● முக்கிய குறிப்பு
கனடாவுக்குப் பெண்கள் குடும்பமாகச் செல்ல இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

உங்கள் பயண அமைப்பாளர்:
**S.P. ANTON**
No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம். (C 618)


# எமது உணர்வுகள் மதிக்கப்படவில்லை

## பூஸா கைதிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், அக் 20

சமாதன ஒப்பந்தம் கைச்சாத்தாகிபதினைன்கு மாதங்களாகி விட்ட பின்னரும் நாம் இன்னும் சிறைகளில் வாடத்தான் வேண்டுமா? எமக்கு இந்த வாழ்வு வெறுத்து விட்டது எமது மன உணர்வுகளை இரு அரசுகளுமே மதிப்பதாகத் தெரியவில்லை.

பூஸா முகாமிலுள்ள தண்டிக்கப்பட்ட தமிழ் பேசும் அரசியல் கைதிகள் பொதுஸ்தாபனங்களுக்கு அனுப்பிவைத்திருக்கும் அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஒப்பந்தம் எமக்கு விடுதலையைப் பெற்றுத் தராவிட்டால் மரணமாவது நிரந்தர விடுதலையைப் பெற்றுத் தரட்டும்.

ஸ்ரீலங்கா அரசின் தடுப்பு முகாம்களில் சிறைகளில் வைக்கப்பட்டிருந்த எமது தோழர்களில் கணிசமான தொகையினர் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் நாம் இன்னும் தொடர்ந்து அடைத்து வைக்கப்பட்டுள்ளோம்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளாகிய நாம் ஒப்பந்தம் வந்தும் இது வரை ஒருவர் கூட விடுவிக்கப்படவில்லை.

ஒப்பந்த ஷரத்தின் 2:11 பிரிவு தண்டிக்கப் பட்டவர்களும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெளிவாக விதந்துரைத்தும் நாம் விடுதலை செய்யப்படாதது எமக்குப் பெரும் ஏமாற்றமே.

கைதிகளை விடுதலை செய்வது என்பது ஒரு சாதாரண விடயம். மனிதாபிமான நீதியில் செய்ய வேண்டிய இலகுவான சிறு விடயம்

30-9-1988 இல் இருந்து தொடர்ந்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை பூஸா தற்காலிக சிறையில் மேற்கொண்டு வருகிறோம்.

காந்தியக் கொள்கைகளைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் இலங்கை- இந்திய அரசுகள் எமது காந்திய வழிப் போராட்டதை மதிக்குமா?

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிக்கிறது.

(இ-ஐ)

## மின்தாக்கி மாணவன் பலி

யாழ்ப்பாணம், அக் 20

மழையினால் அறுந்து விழுந்த மின்சார வயரின் மேல் தடுக்கி விழுந்த பாடசாலை மாணவன் மின்சாரம் தாக்கி மரணமானான்.

இந்தச் சம்பவம் நேற்று இணுவில் பகுதியில் இடம் பெற்றது. மரணமானவர் சண்முகநாதன் சசிகரன் [வயது 17] ஆவார்.

(ஒ-9)

## கிணற்றுக்குப் பலி

காரைநகர், அக் 20

கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சென்ற இளம் பெண் விழுந்து மரணமானார்,

இச் சம்பவம் காரைநகர் பாலாவோடையில் இடம் பெற்றது.

(இ-73)

## விண்ணப்பம் ஏற்றுக் கோள்ளப்படும்

குருநகர், அக் 20

இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் பெறுவதற்கு விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு கொட்டடி கிராம சேவையாளர் பிரிவு ஜே/43. நாவாந்துறை கிராமசேவையாளர் பிரிவு ஜே/44 ஆகியவற்றில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்படி கிராம சேவை அதிகாரி திரு. ம. ஆரோக்கியநாதர் இதனைத் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்திருக்கும் பகுதிக் கிராம சேவையாளரிடம் நிவாரணத்துக்கு பதிவு செய்யவில்லை என்ற சான்றிதழுடன் பிரதான குடியிருப்பாளர் பெயர், அங்கத்தினர் தொகை முகவரி என்பனவற்றை வெள்ளைத்தாளில் குறிப்பிட்டு விண்ணப்பிக்கலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார்

(இ-51)

## சிக்கன கூட்டுறவுச் சங்கம்

முல்லைத்தீவு, அக். 20

முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பு வீரகத்தி விநாயகர் சிக்கனக் கூட்டுறவுச்சங்கம் முல்லைத்தீவு மாவட்ட சிக்கனக் கூட்டுறவுச் சங்கத்தின் வெளிக்கள உத்தியோகஸ்தர் திரு. க. பரமேஸ்வரன் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

புதலுட உத்தியோகத்தர்களாகக் கீழ்க்காண்போர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்; திரு. அ. கிருஷ்ணசாமி உபதலைவர்: திரு சு. மகேந்திரன், செயலாளர். திரு. ம. கனகசூரியம், பொருளாளர். திரு. ந. மகாலிங்கம், மேலும் 11 பேர் கொண்ட நிர்வாகக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

(இ- 92

## இடமாற்றம்

பண்டத்தரிப்பு. அக். 20

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. [illegible] நீர்வேலியில் இருந்து பண்டத்தரிப்புக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா கனகசபாபதி**
(இளைப்பாறிய உத்தியோகத்தர் அரசாங்க நெற்களஞ்சியம்)

தோற்றம்: 10-09-1918
மறைவு: 01-11-1987
திதி: 21-10-1988

அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஓடி மறைந்தன. எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் மனதை விட்டு அகலா. உங்கள் ஆத்மா இறைவனடியில் சாந்தியடைய இடைவிடாது பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், தம்பி,
பெருமக்கள், மருமக்கள்,
மைத்துனர், மச்சாள்மார்.

அம்பலவாணர் வீதி,
கட்டுவன், தெல்லிப்பளை. (7269)


## ALCOHOLICS ANONYMOUS- JAFFNA GROUP

குடிப்பழக்கத்தை நிறுத்துவதற்கு விரும்புகிறீர்களா? இது சம்பந்தமாக உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் கீழ்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

சந்திக்கும் நேரங்கள்:
22-10-88 பி.ப. 3 00-பி.ப. 5.00
26-10-88 பி.ப. 3.00 பி.ப. 5,00

"சாந்திகம"
21, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (7280)


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் சாமுவேல் நவரத்தினம் கதிரேசு

தோற்றம்: 5 - 1 - 1928
அநியாய அழிப்பு 20 - 10 - 1987

ஓராண்டு நிறைவின்போது உங்கள் ஆத்மா ஆண்டவரின் நிழலில் இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஞாபகார்த்தமாக உரும்பராய் பரிசுத்த இம்மானுவல் தேவாலயத்தில். 22-10-1988 சனிக்கிழமை காலை 8 30 மணிக்கு நடைபெறும் தேவாராதனையில் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அழைக்கப்படுகின்றனர்.

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.
(7344)

அன்பு மனைவி
பிள்ளைகள்,
சகோதரர்கள்.

# ஓர் ஆண்டு நினைவஞ்சலி





**இரத்தினசிங்கம் விஜயகுமார்**
தோற்றம்: 16 - 10 - 1973

**இரத்தினசிங்கம் சதீஸ்குமார்**
தோற்றம்: 17 - 05 - 1977

மறைவு: 20 - 10 - 1987

சிந்தை குளிர வைத்து சிரித்து நீவிர் எம்மை மகிழ வைத்தீர்கள். ஷெல்லடியால் எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி எங்கு சென்றீர்? வாடுகிறோம் நாம். உங்களுக்குத் தெரியாதா? தந்தை வழியில் நீங்களும் எமை விட்டுப் பிரிந்தீரோ?

பிரிவால் துயருறும்:
திருமதி இரத்தினசிங்கம் கமலாதேவி (அம்மா)
சகோதரன் இ. இராஜகுமார் (கனடா)
தங்கை நிசாந்தி,
திரு. திருமதி தனபாலசிங்கம் (சித்தப்பா, சித்தி)

கிராமசேவை அலுவலர்,
நிசாந்தி நிகேதன்,
[illegible]ச்சி. (7152)


நீர்விநியோகம் உங்களுக்கு ஒரு பிரச்சினையா?
இன்றே தீர்வு காண
**சிங்கர்**
பிறஷ் இல்லாத மின்சார நீரிறைக்கும் இயந்திரம்



கிணற்றில் அல்லது உயர நீர்த்தாங்கியில் இருந்து நீரைப் பெறும் நீங்கள் அழுக்கப் பிரச்சினைகளை எதிர்நோக்கினால் சிங்கரின் பிரஷ் இல்லாத மின்சார நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றை நாடித் தீர்வு காணுங்கள்.

சிங்கரிடம் பலவகையான பிறஷ் இல்லா மின்சார நீரிறைக்கும் இயந்திரங்கள் உள்ளன. விரும்பியதைத் தேர்ந்தெடுத்துப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

- அதிகபட்ச உறிஞ்சு திறன் 1400 கலன்/மணி முதல் 4500 கலன்/மணி
- அதிகபட்ச உறிஞ்சு ஆழம் 25 அடி. (கிணறு மேலும் ஆழமெனின் ஆழ் கிணறு உபகரணங்கள் ரூ. 900/-க்கு உண்டு.)
- மொத்த வீச்சு அளவு 65 அடி.

மொடல் ஈ.பி.எம். 10 1"×1" ரூ. 4,090/-
ஈ.பி. 15 1½"×1½" ரூ. 4,290/-
ஈ.பி. 20 2"×2" ரூ. 5,930/-

விவசாயப் பிரிவு
**சிங்கர்**
மாசற்ற மேன்மை

Minds/SA/7

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தேவைக்கேற்றது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

**குறள்:**
முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.

**பொருள்:**
முகம் மட்டும் மலரும்படியாக நட்புச் செய்வது நட்பு அன்று, நெஞ்சமும் மலரும் படியாக உள்ளன்பு கொண்டு நட்புச் செய்வதே நட்பு ஆகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல. 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805, 22078
யாழ்ப்பாணம்.
20-10-1988 க. வெ. இல 83


## விஜயதசமி உறுதியுரை

நவராத்திரிகள் முடிந்து பத்தாவது நாள் இன்று விஜயதசமி தினம். ஆலயங்கள், இல்லங்கள், தொழில் ஸ்தாபனங்கள், உற்பத்திச்சாலைகள், பாடசாலைகள் என்று பல இடங்களிலும் விஜயதசமி விழா கொண்டாடப்படுகிறது.

விஜயதசமி அன்று சிறுவர்களுக்கு வித்தியாரம்பம் செய்யும் வழக்கமும் தொழில் ஆரம்பிக்கும் பழக்கமும் உண்டு. அன்று கொலு வைத்தலும், ஆயுத பூசை செய்தலும் சிறப்பு வைபவங்களாக அமைகின்றன. அரக்கத் தனத்தையும், அசுரத்தனத்தையும் அன்னை அழித்தொழித்ததை நினைவு கூரும் முகமாக ஆலயங்கள் பலவற்றில் சூரன்போர் அல்லது மானம்பூ விழா நடப்பதும் உண்டு.

சமய விழாக்கள் எல்லாமே குறிப்பிட்ட தத்துவங்களையும், வாழ்க்கை நெறிமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டவை. சக்தி வழிபாட்டுக்கு உரிய நவராத்திரி விழாவும் அப்படியே. உலகை இயங்க வைக்கும் சக்தியைத்துர்க்கையாக, இலச்சுமியாக, சரஸ்வதியாக உருவகித்து அவளிடம் வீரம் செல்வம், கல்வி (அல்லது ஞானம்) ஆகியவற்றைக் குறைவின்றி நல்குமாறு துதித்து இறைஞ்சும் காலம் நவராத்திரி.

வாழ்க்கைக்கு அடிநாதமாக விளங்குபவை ஞானம், செல்வம் வீரம் என்ற மூன்றுமாம். அதாவது ஒருவனது நல்வாழ்க்கைக்கு வளம் மிக்க வாழ்க்கைக்கு மூலவேர்களாக விளங்கிப் பயமூட்டுபவை கல்வி, பொருளாதாரம், பாதுகாப்பு என்பனவே.

இன்றைய தமிழர் வாழ்க்கையிலும் அந்த மூன்றுமே அவசியம் தேவையாகின்றன. தமிழர்களாகிய நாம் சுதந்திரமும், சுபீட்சமும் காண்பதற்கு கல்வி, செல்வம், பாதுகாப்பு ஆகிய மூன்றும் மிக முழு அளவில் தேவை ஒன்று இருந்தும் மற்ற இரண்டும் இல்லாவிடினும், இரண்டும் இருந்து மற்ற ஒன்று தானும் இல்லாவிடினும், தமிழர் சமுதாயம் இப்போதுள்ள இடர்ப்பாடுகளில் இருந்து விடுபடுவது கஷ்டம்.

கல்வி, பொருளாதாரம், பாதுகாப்பு (அதாவது வீரம்) ஆகிய முத்துறைகளிலும் தமிழர்கள் தங்களைப் பலம் கொண்டவர்கள் ஆக்க வேண்டும். அப்போதுதான் அரசியல் சுதந்திரத்தையும், விடிவையும், மறுமலர்ச்சியையும் காண முடியும்

பெறுவதற்கு அரியதாய் தேடிய கல்வியையும், செல்வத்தையும் பாதுகாப்பது எப்படி என்று தெரியாமல் கஷ்டமுறும் நிலையில் தமிழர்கள் இன்று வாழ்கிறார்கள். உயிரே எப்போது தனது உடைமை இல்லாமல் போகுமோ என்ற இராணுவச் சூழ்நிலையில் தமிழனது வாழ்க்கை நிச்சயமற்றதாகி விட்டது:

ஆகையால் பாதுகாப்பு வீரமே இப்போது தமிழர்களுக்கு முதல் வேண்டப்படுவதாகும். தங்கள் உயிரை, தங்கள் செல்வத்தை, தங்கள் அறிவை (கல்வியை) காப்பதற்கும், பெருக்குவதற்கும்- விருத்தி செய்வதற்கும்- பாதுகாப்பு நிலைமை உறுதியாக வேண்டும்

தங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளுக்கும் அநியாயங்களுக்கும் அடிபணியாமல் மன உறுதியுடன் நின்று நீதிக்கும், நியாயத்துக்கும் குரல் கொடுப்பதும் ஒரு வீரமே. அந்த வீரமே இப்போது அவசியம் தேவைப்படுகிறது. அதற்கடுத்து தங்கள் உயிரையும், உடைமையையும், கல்வியையும் காப்பதற்கான பாதுகாப்பு உறுதிப்பாட்டைத் தேடுதல் பிரதானம்.

இன்றைய விஜயதசமியில் எமது மன உறுதியை வளர்க்கவும், எமக்கு வேண்டிய பாதுகாப்பைத் தரவல்ல திடசிந்தையை வளர்க்கவும் திடசங்கற்பம் கொள்வோமாக. அதேவேளை கல்வி விருத்தியையும், பொருள் வளத்தையும் பல்கிப் பெருக்கவும் உறுதி பூணுவோமாக.

## நாட்டுப் பிரச்சனை தீர நேருகுடும்ப உறவு உதவாது
### இப்படிச் சொல்கிறார் ரஞ்சன்

கொழும்பு, அக் 20
நேருகுடும்பத்துடன் இருக்கும் உறவுகளைக் கூறுவதால் இரு நாட்டுப்பிரச்சினைகளையும் தீர்க்கமுடியாது.

ஐ தே க. தலைவர் ரஞ்சன் விஜேரத்தின மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

பண்டாரநாயக்காக்களின் மனதில் இருந்து 'வளவு மனப்பான்மை' போகாது.

இரண்டு நாடுகளின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண உதவ இரண்டு குடும்பங்களுக்கும் இடையேயான உறவு உதவாது.

இப்படி அவர் சொன்னார் (இ-எ)

ஈரானுடன்

# போர்க்கைதிகள் பரிமாற்றத்துக்கு ஈராக் அரசு இணக்கம்!

பக்தாத், அக் 19
போர்க்கைதிகளைப் பரிமாறிக்கொள்ளத் தயாராக இருப்பதாக ஈராக் நேற்று அறிவித்தது.

ஐ. நா. செயலாளர் நாயகத்துக்கு இதனை ஈராக அரசு உத்தியோக பூர்வமாகத் தெரிவித்தது

வளைகுடா அமைதிப் பேச்சுக்கள் சர்வதேச எல்லைபற்றிய பிரச்சினையால் முட்டுக்கட்டை நிலையை அடைந்திருக்கிற தருணத்தில் போர்க்கைதிகளைப் பரிமாறிக் கொள்ளும் முடிவை ஈராக் தெரிவித்திருக்கிறது.

இது பேச்சுவார்த்தையில் ஈராக் கொண்டுள்ள நிலைப்பாட்டை மாற்றாது என்றும் பாக்தாத் அரசு தெரிவித்தது.

ஈரானிடம் 62 ஆயிரம் முதல் 70 ஆயிரம் போர்க்கைதிகளும்,

ஈராக்கிடம் 32 ஆயிரம் முதல் 50 ஆயிரம்பேர்வரை போர்க்கைதிகளும் இருப்பதாக ஐ நா. நம்புகிறது. (எ)

கிரெம்ளின் தலைமைப்பீடத்தில்

## கோர்ப்பச்சேவுக்கு அடுத்தவர் எவருமே இல்லை!

மாஸ்கோ, அக். 18
சோவியத் ஜனாதிபதி மிக்செயல் கோர்ப்பச்சேவுக்கு அடுத்தவர் எவருமே இல்லை என்று அறிவிக்கப்பட்டது.

'நம்பர் 2' இடம் எவருக்கும் வழங்கப்படவில்லை என்று கிரெம்ளின் அரசுப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

இதுவரை காலமும் திரு கோர்ப்பச்சேவுக்கு அடுத்த இடம் திரு. லிகோரி லிகோவிச்சுக்கு வழங்கப்பட்டிருந்தது.

அண்மையில் நடந்த கிரெம்ளின் தலைமைப் பீட மாற்றத்தின்போது, திரு. லிகோவிச், விவசாயத் திணைக்களத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அதுவரை காலமும் கிரெம்ளின் தலைமைப் பீடத்தின் கொள்கை வகுப்பாளராகவும் திரு. லிகோவிச் கடமையாற்றிவந்தார்.

இப்போது அந்தப் பொறுப்பு திரு. மெட்வெட்வோவ் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோர்ப்பச்சேவ் வெளிநாடு சென்றால், அவருக்குப் பதில் கடமையாற்றுபவரை கிரெம்ளின் பொலிற்பீரோ உறுப்பினர்களே தங்கள் மத்தியில் இருந்து தெரிவுசெய்வர்.

இப்படி கிரெம்ளின் அரசு அதிகாரி தெரிவித்தார். (எ)

## குண்டு வெடிப்பில் 7 பேர் பலி 12 பேர் காயம்

இஸ்லாமாபாத், அக் 19
இஸ்லாமாபாத்துக்கு அருகில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 7பேர் உயிரிழந்தனர்; 12 பேர் காயமடைந்தனர்.

ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்தது

இச்சம்பவம் செவ்வாய் இரவு இடம்பெற்றது. (எ)

## மாஸ்கோவில் கம்யூ. தோல்வி

மாஸ்கோ, அக் 19
சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சரித்திரத்தில் முதல் தடவையாக உள்ளூராட்சி தேர்தல் ஒன்றில் உத்தியோக பூர்வ கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் தோற்றார். கட்சி சார்பற்ற வேட்பாளரே வெற்றி பெற்றார்.

டாட்டார் குடியரசின் தலைநகரான கஸான் மாநிலத்தில் நடந்த இத்தேர்தலில் கம்யூனிஸ்ட் வேட்பாளருக்கு 14 01 சதவீத வாககுகளே கிடைத்தன.

பேராசிரியர் வி கொட்டோவுக்கு 42 8 சதவீத வாக்குகளே கிடைத்தன.

சோவியத் தேர்தல் சட்டத்தின்படி 50 சதவீத வாக்குகள் பெற்றவரே வெற்றிபெற்றதாக அறிவிக்கப்படுவார்

இத்தேர்தல் மீண்டும் இம் மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (எ)

## எம். ஜி. ஆர் நினைவாக தபால்தலை வெளியிடுக!
### பிரதமருககு வேண்டுகோள்

சென்னை, அக 19
எம். ஜி. ஆர் உருவப் படத்துடன் தபால் தலை வெளியிடப்பட வேண்டும் என்று ஜானகி அணி அ. தி மு. க. எம்பி திரு. கே. ஆர். நடராஜன் பிரதமர் ராஜீவ் காந்திக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்

பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் கூறியிருப்பதாவது;

நேரு பிறந்த நாள் குழந்தைகள் தினமாகவும்,

டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்த நாள் ஆசிரியர் தினமாகவும் கொண்டாடப்படுகின்றது.

ஏழை எளிய மக்களுக்காக வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்டவர் எம் ஜி ஆர். ஜனவரி 17 ஆம் திகதி எம் ஜி ஆர். பிறந்த நாள். இந்த நாளை வறுமை ஒழிப்பு நாளாக இந்தியா முழுவதும் கொண்டாட வேண்டும்

எனவே எம். ஜி ஆர். நினைவாக அவரது உருவப்படத்துடன் கூடிய தபால் தலையை அவரது முதலாவது நினைவு நாளான வருகிற டிசம்பர் 24 ஆம் திகதி வெளியிடவேண்டும்.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பிரித்து ஒரு பிரிவுக்கு 'பாரசரத்தை டாக்டர் எம் ஜி. ஆர் மாவட்டம்' என்று பெயர்சூட்ட வேண்டும்.

ஜானகி அம்மாளுடன் எம். ஜி. ஆர். இருப்பது போன்ற உருவப் படத்தை தமிழக சட்டசபையில் வைக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் ஆறும் வகுப்பு பாடப்புத்தகத்தில் எம் ஜி ஆரின் வாழ்க்கை வரலாற்றைச் சேர்க்கவேண்டும்.

இவ்வாறு பிரதமரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (எ)

## நோபல் பரிசு

ஒஸ்லோ, அக். 19
வைத்தியத் துறைக்கான நோபல் பரிசை பிரிட்டனும் அமெரிக்காவும் பகிர்ந்து கொண்டன. (உ)

## நம் சக்தியை நெறிப்படுத்தவே நவராத்திரி விழா

சைவம், வைணவம், சாக்தம் இது இந்து மதத்தின் மூன்று பிரிவுகள்.

சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடுபவர் சைவர். விஷ்ணுவை முழுமுதற் கடவுளாக வழிபடுபவர் வைணவர். சக்தியை முழுமுதற் கடவுளாக வழிபடுபவர் சாக்தர்.

ஆதி சங்கரர் காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட சமரச நிலையின் பயனாக இந்துக்களாகிய நாம் அனைவரும், மூன்று நிலைகளிலும் வழிபடுதலை மேற்கொண்டு வருகின்றோம்.

எனினும் ஒவ்வொரு அமைய நிலையிலும் சில அடிப்படைத் தத்துவங்கள் அடிநாதமாக விளங்குவது உணர்தற்பாலதாகும்.

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வகையில் சிறப்புச் சக்திகளைப் பெற்று விளங்குகின்றான்.

அது அவனுக்கு இறைவனால் வழங்கப்பட்ட அருட்கொடையாகும்.

இதனை அவன் இதயபூர்வமாக உணர்ந்து, அடுத்தவனை விட நான் உயர்ந்தவன் என்னைவிட அடுத்தவன் தாழ்ந்தவன் என்ற ஆணவத்தை விட்டொழித்து தாமத, இராசத குணங்களில இருந்து விலகி, சாத்வீக குணநிலையில் நின்று, தனக்கு இறைவனால் வழங்கப்பட்ட சக்தியை தெய்வீகமாகப் பேண வேண்டும்.

இதனையே சக்தி வழிபாட்டின் முக்கிய கொண்டாட்டமான நவராத்திரி நமக்கு உணர்த்துகின்றது.

அன்றொரு நாள் சிவனுக்கும் உமைக்கும் இடையே ஒரு கருத்துப் போர் நடைபெற்றது.

உலகில் சிவமே உயர்ந்தது என்றார் சிவன்.

இல்லை சக்திதான் உயர்ந்தது என்றார் உமை.

முடிவில் இருவரும் ஒரு சமரச நிலைகுவந்துவிட்டனர்.

சிவத்தின் பெருமையைச் சக்தியும், சக்தியின பெருமையை சிவமும் உணர்ந்து கொண்டனர்

உயிர், மெய் என்ற நிலையிலே அர்த்தநாரீஸ்வர கோலத்தில இருவரும் காட்சி அளித்தனர்.

இது ஒரு புராணக் கதை.

குடும்பச் சண்டைக்கு ஏன் அத்துணை முக்கியத்துவம் என்று நாம் எண்ணலாம்.

ஆனால் இந்து மதத்தின் முதன் நூலான வேதத்தின் அடிப்படை உண்மைகளை பாமரமக்களுக்கும் உணர்த்துவதற்காகவே புராணக் கதைகள் உருவாக்கப்பட்டன.

அவ்வாறுயின் இங்கே இப்புராணக் கதை எமக்கு எதனை உணர்த்துகின்றது!

ஒரு பொருளின் சக்தியை வைத்தே அப்பொருள் சிறப்புப் பெறுகின்றது

சக்தி அற்று ஒரு பொருள் இருக்குமாயின் அது, பிரயோசனமற்றதாகி விடுகின்றது.

அருவருப்பிற்கும் உரியதாகி விடுகின்றது.

சக்தி இத்தகைய சிறப்பு வாய்ந்ததாக இருப்பினும், அது இயங்குவதற்கு உடல் வேண்டும்.

உடம்பு இல்லையேல் உயிர் அதன் சக்தி என்பன பயனற்றதாகி விடுகின்றது

இதனையே திருமூலரும் உடம்பார் அழியில் உயிரார் அழிவர் என்று கூறினார்.

இதனையே அன்று பரமசிவனுக்கும் உமாதேவிக்கும் நடந்தகுடும்பச் சண்டை எமக்கு உணர்த்துகின்றது.

எம்மில பலர் இன்று உடலை நன்கு பேணுவதற்கு முயன்று வருகின்றோம் [illegible] முயற்சிகள் [illegible] இருக்கின்றன.

ஆனால் எம் சக்தியை நன்கு நெறிபபடுத்துவதற்கு எந்த வைத்திய சாலையும் இருப்பதாகத் தெரியவில்லை.

எமது சக்தியை எவ்வாறு நெறிப்படுத்த வேண்டும் என்பதையே நவராத்திரி விழா எமக்கு நன்கு உணர்த்துகின்றது.

சக்தி என்று நாம் சொல்லுகின்ற போது எம்மிடமுள்ள சிறப்பியல்புகள் அனைத்தையும் அதற்குள் அடக்கலாம்.

அது எமது உடற்பலமாக இருக்கலாம். வாழ்க்கை வசதிகளாக இருக்கலாம், கல்விச்சிறப்பாக இருக்கலாம்.

இவற்றை நாம் தெய்வீகமாகவும் மென்மைக்குரியதாகவும் பேண வேண்டும்.

இதனாலேயே வீரம், செல்வம், கல்வி என்ற சக்திக்கு தெய்வங்களை அதிபதிகளாக்கி அதுவும் பெண் தெய்வங்களை அதிபதிகளாக்கி மலைமகள், அலைமகள், கலைமகள் என்றுஒன்பது நாட்களிலும் எதுவித ஏற்றத்தாழ்வுமின்றி மும்மூன்று நாட்களாக வழிபாடு செய்து வருகின்றோம்.

எனினும் முதலில் நாம் உடல ஆரோக்கியமுள்ளவர்களாக இருந்து இல்லற வாழ்க்கைக்கான பொருளாதார வசதிகளைப் பெற்று கல்வி அறிவுற்றவர்களாக வாழவேண்டும் என்பதையே முதலில் உமாதேவிக்கும் பின்னர் இலக்குமிக்கும் அடுத்து சரஸ்வதிக்கும் வழிபாடு செய்வது நமக்கு உணர்த்துகின்றது.

இறுதிநாளான 10 ஆம் நாள் "மானம்பூ" நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

அன்றைய தினம் ஆதிபராசக்தியை மஹிடாசுரமர்த்தனியாக வழிபடுகின்றோம்.

மஹிடாசுரனை ஆதிபராசக்தியானவளின் வாகனமான சிங்கம் குதறிக் கொல்கின்றது.

அதற்கு மேலை சிவன் அமைதியாக நின்று கொண்டிருக்கின்றார்

இக்காட்சி அர்த்தமுள்ளவகையில் தீட்டப்பட்ட இரவி வர்மாவின் சித்திரம் சித்தரிக்கின்றது

தாமத குணத்துக்கு உரிய அந்த மஹிடாசூரனை இராஜச குணத்துக்குரிய சிங்கம் கொல்கின்றது.

எனினும் அது ஆதிபராசக்தியின் கட்டுப்பாட்டிலேயே நிற்கின்றது.

இவற்றுக்கு மேலே இறைவன் சாத்வீக குணநிலையில் நின்று கொண்டிருக்கின்றார்.

இவ்வாறே நாமும் எம் மனதில் உள்ள தாமத இராசத குணங்களை அகற்றி சாத்வீக குணநிலையில் நின்று வாழுவதுடன் எமக்கு இறைவனால் வழங்கப்பட்ட அருட்சக்திகளைத் தெய்வீகமாகப் பேண வேண்டும். (ச)

## துளபகிரி சோதிடர்

## பாலர் பாடசாலை ஆரம்ப விழா இன்று

மானிப்பாய் கோயில் பற்று இந்துசமய விருத்திப் பாலர் பாடசாலை ஆரம்பவிழா இன்று 20 ஆம் திகதி விஜயதசமி அன்று காலை 10 மணிக்கு மானிப்பாய் இலங்கை வங்கிக்கு அண்மையில் உள்ள இல்லத்தில் ஆரம்பமாகும்

சமுதாயத்தின் நலன் கருதி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்படும் இப்பாடசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களினால் நவீன விஞ்ஞான முறையில் கல்வி பயிற்றப்படும். (சி)

## வேம்படி 6 ஆம் ஆண்டு பிரவேச பரீட்சை

வேம்படி மகளிர் கல்லூரியின் 6ஆம் ஆண்டுப் பிரவேசப் பரீட்சை ஏற்கனவே திட்டமிட்டபடி எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்

இந்தப் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெறாதவர்கள் கல்லூரிக்கு நேரில் வந்து பெற்றுக்கொள்ளுபடி வேண்டப்படுகின்றனர்.

## வாணி விழா

யாழ்ப்பாணம் அக் 20
சுன்னாகம் கருணா ரியூட்டரியில் வாணி விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது

கலைவிழாவில் நடனம், நாடகம், சொற்பொழிவுகள் சிறப்பம்சமாக இடம் பெற்றன (இ)

தமிழ்நாட்டில் தங்கியிருந்த

## யாழ். அகதிகள் அனைவரும் திரும்பினர்

சென்னை, அக் 19
தமிழகத்தில் தங்கியிருந்த யாழ மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் அகதிகள் அனைவரும் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது

திங்களன்று தமிழ் நாட்டிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட 14 ஆவது தொகுதி தமிழ் அகதிகளுடன் யாழ் மாவட்டத்தில் இருந்து வந்த 3 657 அகதிகளும் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர் என்று மேலும் அறிவிக்கப்பட்டது

இனிமேல் அகதிகளை ஏற்றிக்கொண்டு கப்பல் எதுவும் காங்கேசன்துறைக்கு வரமாட்டாது.

இதேவேளையில் கலைமன்னாருக்கு இன்னும் இரு தடவைகள் மட்டுமே அகதிகள் கப்பல் வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்குப் பிறகு அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தின் பின்னரே மீண்டும் அகதிகளுக்கான கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும்

அடுத்த சில வாரங்களில் கால நிலையில் மாறுதல்கள் ஏற்படும் இந்த நிலையில் கடல் நிலைமை கப்பல் சேவைக்கு ஏற்றதாக இருக்காது என்றும் இதனாலேயே இந்த சேவை இடை நிறுத்தப்படுகிறது என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ-9)




## தமிழை வளர்ப்போம்

இன்று விஜயதசமி தினம். குழந்தைகளின் மழலை ஒலி இனிமைத் தமிழாக அமைய ஏடு தொடக்கப்படும் நன்னாள் இந்நாளாகும். குழந்தைகளுக்கு மட்டுமே கல்வி உரித்தானதல்ல எனவே வளர்ந்த மனவர்களும் சமூகத்தில் அனைவரும் நலனவற்றை ஊன்றிக் கடைப்பிடித்தல் நல்லது.

எம் மாணவரிடையே தமிழ் எழுத்துக்கள் இன்று தம் உருவம் இழந்து சிதைகின்றன. அம்மாவிலுள்ள அகரமானது எகரம் போலமாறுகின்றது தமிழிலுள்ள ழகரத்தையும் ஓம் என்பதன் முதலெழுத்தையும் எழுதத் தெரியாது பிள்ளைகள் திகைக்கின்றனர்.

இவ்விதம் அநேக வேதனைகள். இந்நிலைமாறி தமிழ் எழுத்துக்களை நல்ல முறைப்புடன் முறைபெற எழுத மாணவர் பயின்றிட வேண்டும் நல்ல எழுத்தும் ஒரு சிறந்த உடைமையே இதில் ஆசிரியர்களது பங்கும் கல்வி நிலையங்களின் பணியும் இடம்பெறட்டும்.

இரண்டாவதாக, தமிழ்க்குடும்பங்கள் தமிழ்ப் பத்திரிகைகளைக் காசுக்கு வாங்கிப் படிக்கும் வழக்கம் பெருக வேண்டும் அயல் அண்டை வீடுகளிலும் பஸ்ஸிலும் ரயிலிலும் கை நீட்டி வாங்குதல் முழுமைதராது இது பிறருக்கும் கஷ்டம்.

அது போல மாதமொரு தமிழ் நூல வாங்கிப் பேணும் பழக்கம் வந்து விட்டால் இரண்டு வருடத்துள் இருபதிற்கும் கூடிய நல்ல புத்தகங்கள் ஒவ்வொரு வீட்டிலும் அணி செய்யும் அல்லவா? மாதாந்த வருமானம் பெறுவோர் இதனிலும் பெருநிதியம் தேடுதல் அரிது புதுக்கடை செல்லும் புது மணத் தம்பதிகள் மங்களப் பொருள் வாங்க புத்தக கடைகளுக்கும் செல்லுதல் பொருத்தமாகும் இவ்விதம் தமிழ் வளரட்டும். எம் அறிவு பெருகட்டும்

கலாசாலைவீதி
திருநெல்வேலி. — நாக. பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற

✶ மணிப்புரி
✶ காஞ்சிபுர ✶ பெனாரஸ்

சேலைகளைப் பெற்றுக்கொள்ள

**மயூரா சென்ரர்**
13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.



# உதயன்

20 - 10 - 1988 வியாழக்கிழமை



சேட்டிங்ஸ் ✶ சூட்டிங்ஸ்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்

**மயூரா சென்ரர்**
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.


## நெடுந்தீவில் குதிரைகள் சாகின்றன

நெடுந்தீவு, அக். 20

நெடுந்தீவுப் பகுதியில் நிலவும் வரட்சி காரணமாக குடிதண்ணீர் இன்றி அங்குள்ள குதிரைகள் உட்பட சால்நடைகள் பலவும் திடீர் திடீரென விழுந்து மரணமாகின்றன.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் கணிசமான அளவு மழை பெய்திருக்கின்ற போதிலும் நெடுந்தீவில் குறிப்பிடத்தக்க அளவுக்கு இதுவரை மழை பெய்யவில்லை. (உ-111)


வெளிவந்துவிட்டது!

### கேதார கௌரி விரத கால
## பாராயண நூல்

கேதார கௌரி விரத நோன்புக் காலங்களில் மிகப் பிரயோசன நிமித்தம் அனைவரும் எளிதில் படித்துப் பயனடையும் பொருட்டு கௌரி நோன்புக் கதைகளும் தமிழில் பூஜாகல்பத்துடன் திருமுறைத் தொகுப்பும் பலஆராய்ச்சி வரலாற்றுச் சிறப்புக்களும் நிறைந்த தெய்வீகமகிமை வாய்ந்த

**ஸ்ரீமத் அர்த்த நாரீஸ்வரி**
**அர்த்த நாரீஸ்வர மகிமை**

எனும் நூல் சோழர்கால சிற்ப நுட்பக் கலையழகுடன், அருட்கலையழகும் சேர்ந்து கும்பகோணம் சுவாமிமலையில் உருவமைக்கப் பெற்ற அருள்மிகு அர்த்த நாரீஸ்வரசுவாமியின் வர்ணப்படத்துடன் வெளிவந்துள்ளது.

சுவாமி அறையில் வைத்து வணங்கக் கூடிய வர்ணப்படத்துடன். 25-00

விபரங்களுக்கு,
பி. பா, பஞ்சாக்ஷரக்குருக்கள்
மங்கள மாகாளியம்மன் தேவஸ்தானம்
ஐயனார் கோவில் ரோட்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(C/408)


## ஷார்ஜா கிரிக்கெட்;
# இந்தியா தோல்வி! பாகிஸ்தான் அணியிடம்

ஷார்ஜா, அக். 20

ஷார்ஜாவில் நடைபெறும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இந்திய அணி பாகிஸ்தான் அணியிடம் தோல்வியுற்றது

பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 49.1 ஓவரில் எல்லா விக்கட்டுக்களையும் இழந்து 246 ஓட்டங்களை எடுத்தது.

சலிம் மாலிக் 101 ஓட்டங்களையும் மியன்டாட் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய அணி 50 ஓவர்களில் 8 விக்கட்டுக்களை இழந்து 212 ஓட்டங்களையே எடுத்தது.

இப்போட்டியில் சிறந்த ஆட்டக்காரராக சலிம் மாலிக் தெரிவானார்.

இப்போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இறுதிப் போட்டியில் பங்கு பற்றும் தகுதியை பாகிஸ்தான் பெற்றது.

இறுதிப்போட்டி சனிக்கிழமை நடைபெறும்.

வெள்ளிக்கிழமை இந்திய அணி மேற்கு இந்திய அணியை எதிர்த்து அரையிறுதியாட்டத்தில் மோதும். (உ-எ)

## ஆரம்ப ஆசிரியர்
# நியமனக் கடிதம் வழங்குதல் மட்டுமே தற்போது நடைபெறுகிறது
## விசாரணை, முறைப்பாடுகள் பின்பு

யாழ்ப்பாணம் அக் 20

ஆரம்ப ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் அலுவல்கள் மட்டுமே தற்பொழுது நடைபெற்று வருகின்றன. இந்த விடயம் தொடர்பான விசாரணைகளும், முறையீடுகளும் எதிர்வரும் சனிக்கிழமையின் பின்னரே ஏற்றுக்கொள்ளப்படும்.

இவ்வாறு யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. கு சோமசுந்தரம் உதயனுக்குத் தெரிவித்தார்.

தாம் நியமிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு பதிலாக வேறு பாடசாலை தரும்படி சிலரும், ஆசிரியர்களை மாற்றித் தரும்படி அதிபர்கள் சிலரும் முறையீடு செய்கின்றனர்.

நியமனக் கடிதங்களை வழங்கும் வேளையில் இத்தகைய முறையீடுகளை விசாரணை செய்ய முடியாது. எனவே எதிர்வரும் சனிக்கிழமையின் பின்னரே இது விடயமாக தம்முடன் தொடர்பு கொள்ளும்படி சகல ஆரம்ப ஆசிரியர்களுக்கும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (ஓ-5-9)

## பூஸா..
(1-ம்பக்கத் தொடர்ச்சி)

திற்கு ஆதரவு தருமாறு பொதுமக்களிடமும். அரச சார்பற்ற பொது நிறுவனங்களிடமும் மற்றும் பிரஜைகள் குழுக்கள், அன்னையர் முன்னணி ஆகிய அமைப்புகளிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-9)

## ஆண்டு..,
(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பட வேண்டிய பிரஸ்தாப பாடநூல்கள் இப்போதுதான் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்திருக்கிறது.

புத்தகங்களைப் பெற அதிபர்கள், கொத்தணி அதிபர்கள் ஊடாகக் கல்விப்பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளனர். (ஓ-5 9)

## பிரதமர் பிரேமா சொல்கிறார் இப்படி:
# 'நான் ஜனாதிபதியானால் எந்த ஒரு நாட்டுக்கும் பின்பாட்டுப் பாடேன்'

கொழும்பு, அக். 20

நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் இந்தியாவுக்கோ அல்லது வேறு எந்த நாட்டுக்கோ பின்பாட்டுப் பாட (Fiddle) இலங்கை நாட்டை அனுமதிக்கமாட்டேன்.

கண்டியில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் பிரதமர் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

நான் வெற்றியீட்டினால், ஜனாதிபதியாக தலதா மாளிகையின் எண்கோண மண்டபத்தில் பிரதமர் நீதியரசர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வேன்.

இந்தக் கட்டத்திலாவது இந்தியாவுடனான பிரச்சினைகளைத் தீர்த்து அமைதிப் படையைத் திருப்பி அனுப்பி, மாணவர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதா என்று என்னைச் சிலர் கேட்கிறார்கள்.

அவர்களுக்குச் சொல்லிவைக்க விரும்புகிறேன் நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இல்லை குறைந்த அதிகாரங்கள் கொண்ட பிரதமராகவே நான் இருக்கிறேன்.

அரசமைப்புச் சட்டப்படி ஜனாதிபதி தான் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர், பிரதமர் அல்ல நாடாளுமன்றத்தில் என்னைப் பியோன் என்று கூறி எதிர்க்கட்சித் தலைவர் என்னை நையாண்டியும் பண்ணியிருந்தார்.

அந்த நேரம் அதற்கு பதிலளிக்க விரும்பவில்லை. ஏனென்றால் அவர் சொன்னதில் உண்மையுமிருந்தது

நான் மக்களால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதையே விரும்புகிறேன். தனிநபர் என்னை ஜனாதிபதியாக நியமிக்கப்படுவதை நான் விரும்பவில்லை

இப்படி பிரதமர் சொன்னார். (ஓ எ)

## பரீட்சை நடைபெறவில்லை

யாழ்ப்பாணம் அக் 20

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்றுக் காலை நடைபெறவிருந்த சட்டம், பகுதி - II பரீட்சை வினாத்தாள்கள் வந்துசேராத காரணத்தினால் நேற்று நடைபெறவில்லை

பிரஸ்தாப பரீட்சைக்கென நேற்றுக் காலை 9 மணிக்கே ஏராளமான மாணவர்கள் தொழில் நுட்பக் கல்லூரிக்கு சமூகமளித்திருந்தனர். எனினும் வினாத்தாள்கள் வந்துசேராமையால், தபால் பொதிகள் வந்ததும் பிற்பகல் ஒரு மணிக்கு பரீட்சை நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

எனினும் நேற்றைய தபால் பொதிகளில் வினாத்தாள் வராததால் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வினாத்தாள்கள் கிடைத்த மறுதினம் பரீட்சை நடத்தப்படும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது (உ-5-9)

## நாளை நடக்கும் பவள விழா

யாழ்ப்பாணம், அக் 20

இராமநாதன் கல்லூரிப் பவளவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8 30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு வெற்றிவேலுசபாநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ)


## ஓர் அரிய சந்தர்ப்பம்
### கனடா ஜேர்மனி அவுஸ்திரேலியா

போன்ற நாடுகளுக்கு விசா வசதிகளுடன் பிரயாணங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன

மேலும்

### பகறெயினும் குவைத்திலும்

பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பகறெயின்

| | | NOS | SALARY |
|---|---|---|---|
| (1) | Welders | - 15 | — 100 B D |
| (2) | Mechanical Engineers | - 03 | — 175 B. D |
| (3) | Pharmacists | - 10 | — 150 B D |
| (4) | Masons | - 05 | — 60 B. D |
| (5) | Carpenters | - 05 | — 60 B D |

Food & Accommodation Provided Free

### KUWAIT BUILDING MATERIALS SHUKI

| | | Nos | Salary |
|---|---|---|---|
| (1) | Electrical Engineer | 2 | 200KD |
| (2) | H. V. Drivers Preferably | 10 | 70-80KD |
| | with Gulf Licence or Kuwaiti Licence | | |
| (3) | Fork Lift Operators | 3 | 70-80KD |

For Kuwait Vacancies
Accommodation without Food
Annual Leave One month
8 Hour work Shift
Over time at Kuwait Govt Stipulated Rates
One Kuwaiti Dinar is Eqivalent to Rs 100/-

முக்கிய அறிவித்தல்
எமது காரியாலயம் 18-08 88 தொடக்கம் பின்வரும் முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**TRANS WORLD ASSOCIATES Ltd.,**
**TRAVEL & FOREIGN EMPLOYMENT DIVISION**

Upstair Bldg. M. P. C S Shops — Above Kokuvil, K. K. S Road, Kokuvil Junction

Office Hours:- 8-00 a m to 2-00p m (Daily)

Please Contact
Mr. C. V. Rajendram
(7341)


## தென் இலங்கையில்,....
(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டபப் பகுதியில் சுமார் இருநூறு பிக்குகள் வரை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

கொழும்பில் இடம்பெற்ற அசம்பாவிதத்தில் ஆறு பொலீஸார் காயமடைந்தனர்.

4 பொலீஸ் வாகனங்கள் சேதமடைந்தன.

கொழும்பு நகரில் ஜனாதிபதி மாளிகை நோக்கி நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

### தாக்குதல்

வடமத்திய மாகாணத்தில் ஆயிரக்கணக்கான தீவிரவாதிகள் பொலீஸாரைத் தாக்கினர் என்றும்—

அவர்களைக் கலைக்க பாதுகாப்புப்படையினர் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது

தென் பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி வந்த வாகனங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால் நிறுத்தப்பட்டன.

அரச பஸ்கள் கல் வீச்சுக்கு இலக்காகின. இதனால் சுமார் ஐந்து பஸ்கள் வரை சேதப்படுத்தப்பட்டன.

இரத்மலானையில் அலுவலக ஊழியர்களையும் தொழிற்சாலை ஊழியர்களையும் வெளியே வந்து ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளுமாறு தீவிரவாதிகள் பலவந்தப்படுத்தினராம்.

இதனையடுத்து கொழும்பு நகர் உட்பட அதன் சுற்றுப்புறங்களிலுள்ள அலுவலக ஊழியர்கள் பெருமளவில் நண்பகலுடனேயே தமது அலுவலகங்களை விட்டு வீடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இதனிடையில் தென் மாகாணத்திலும் வடமத்திய மாகாணத்திலும் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிலாளர்கள் அரசுக்கு எதிராக பேரணி திரள வேண்டும் அல்லது மரண தண்டனையை எதிர்நோக்க வேண்டும் — என்று தென்இலங்கைத் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ-ஐ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. கந்தப்பு சோமசுந்தரம்**
(ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர்)

தோற்றம்: 05 - 09 - 1921 — மறைவு: 30 - 10 - 1987

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே! விளக்கு அணைந்த பின் நாம் இருளில் தத்தளிக்கின்றோம் உண்மை, அஞ்சாமை நடுநிலைமை பரோபகாரம் ஆகிய பண்புகள் அமைந்த எங்கள் தெய்வமே! எம்மை வழி நடத்திய உத்தம புருஷோ! நீங்கள் எம்மைப் பிரிந்து ஆண்டு ஒன்று கழிந்தாலும் உம் நினைவு எம்மை விட்டு நீங்காது, உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி
திருமதி குணவதி சோமசுந்தரம்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உடுப்பிட்டி.
(7330)



## 1 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 20-9-44



இறப்பு: 20-10-87

## S. ரூபி

பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள் தாய், தந்தை, சகோதரர்கள், சகோதரிகள்,

கோப்பாய் ரோட்
உரும்பராய்.,
(7507)


# மரண அறிவித்தல்கள்

### அம்பலவாணர் நடேசபிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியர்)

அம்பலவாணர் நடேசபிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) காலமானார். இவர் லோகேஸ்வரியின் கணவரும், விவேகானந்தன் (யாழ். மருத்துவபீடம்) முருகானந்தன் (ஹாட்லிக்கல்லூரி) திருமதி. விவேகானந்தி கேதீஸ்வரனின் தந்தையாரும், கந்தசாமி கேதீஸ்வரனின் மாமனாரும், திரு ஸ்ரீகந்தராசா இளைப்பாறிய உப அதிபர், (தொழில் நுட்பக் கல்லூரி) திருமதி. மகேஸ்வரி அருணாசலம் ஆகியோரின் சகோதரருமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-10-1988 இன்று மிருசுவில் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் (7350)

### தப்பர் நவரெட்ணம்
(Retired Station Master Rangoon & Store Keeper)

தம்பர் நவரெட்ணம் அவர்கள் 19-10 88 அன்று காலமானார். இவர் காலம் சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும் திருமதி கருணாதேவி தருமராசா, செல்வி ராமபாய். ஆகியோரின் அன்புத் தந்தையும் தருமராசாவின் (ஓமான்) அன்பு மாமனாரும், சிறிராமின் (கனடா) அன்புப் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக தெல்லிப்பளை கொத்தியால் மயானத்திற்கு பி ப. 2 மணிக்கு 20-10-88 இன்று எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

D.R.O offic: Lane
தெல்லிப்பளை,

தகவல்!
பிள்ளைகள்
(7506)

### செல்லத்துரை சிவகுருநாதன்

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவராகிய செல்லத்துரை சிவகுருநாதன் காலமாகி விட்டார். இவர் செல்லத்துரை சிவக்கொழுந்து தம்பதிகளின் மூத்த புதல்வரும். பராசக்தியின் அன்புக் கணவரும், வரதலக்சுமி, தனலக்சுமி விஜயலட்சுமி, தாமரைச் செல்வி, கமலவாசினி, உதயசூரியன் ஆகியோரின் அன்புத்தந்தையும், யோகராஜா, (சிறைச்சாலை ஓவசியர் யாழ்), சின்னராஜா, கோபாலகிருஸ்ணன் (பொலிஸ் உத்தியோகஸ்தர் கிளிநொச்சி), சண்முகராஜா, அருளானந்தம் (பொலிஸ் உத்தியோகஸ்தர் K K.S), சிவபாக்கியம், ஜெயலக்சுமி, நகுலேஸ்வரி, சிவசோதி, கலாமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுப்பிரமணியத்தின் அன்பு மாமனாரும், காயத்திரி, நித்யப்பிரியா, ஆகியோரின் பேரனும், சுப்பையா, கோபாலசிங்கம், மருதவாணன், துரை, ராசன், குலம் பவளம், லீலா, ராஜேஸ் கிளி, ரதி, ஆகியோரின் மைத்துனரும், இராசையா (J.P)வின் பெருமகனும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வியாழக்கிழமை (20-10 88) காலை 10 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

இல 3 ஸ்ரான்லிக் கல்லூரி வீதி
யாழ்ப்பாணம்

தகவல்:
செ. கோபாலகிருஸ்ணன்
(7351)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 20-10-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Thursday 20th October 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org